இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியத்தின்

# வளரும் செடி

ஆண்டு சந்தா ரூ.25   தனிப்பிரதி ரூ.3

மலர் 17   மார்ச் 2026   மணம் 12



## கொம்பைப் (கிளை) பயன்படுத்துங்கள்...

ஆசிரியர் : சகோ. ஜான் M. ஜெயராஜ்

# இதயந்திறந்து

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும் என்ற இரட்சகர் இயேசு நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதமும் தேவன் நமக்குத் தருகின்ற புதுப்புது மன்னாவுக்காக தேவனைத் துதிப்போம். அவர் ஒருவரே நமது நினைவுகளையும், எதிர்பார்ப்புகளையும் அறிகிறபடியினால் சமயத்திற்கேற்றபடி போதித்து நடத்துகிறார்.

சிலுவை தியான நாட்களுக்குள் பிரவேசிக்க கிருபை செய்த கர்த்தரைத் துதிப்போம். இந்த நாட்கள் நம்மை நாமே ஆராய்ந்து, சோதித்து அறிந்து சீர்படுத்த வேண்டிய நாட்கள். சிலுவையின் அனுபவங்களைச் சிந்தித்து, அதின்வழியாக உண்டாகிற மீட்பையும், விடுதலையையும் பெற்றுக்கொள்வோம்.

நமது மிஷனரி பணித்தளங்களுக்காகவும், விசுவாச மக்களுக்காகவும் ஜெபிப்போம். அவர் ஒருவரே, காரியங்களை ஜெயமாக நடத்துகிறவர். பணித்தள தேவைகள், எதிர்பார்ப்புகள் யாவற்றையும் கர்த்தர் நிறைவேற்றிட ஜெபிப்போம். நாளுக்கு நாள் வளர்ச்சியையும், ஆத்துமாக்களின் பெருக்கத்தையும் பெற்றிட ஜெபிப்போம்.

நமது மாவடியில் நடைபெற இருக்கும் 40 ஆவது கன்வென்ஷனுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். சட்டமன்ற தேர்தல் தடையாக இல்லாதபடிக்கு ஜெபிப்போம். கர்த்தரே காரியங்களைச் வாய்க்கச் செய்வராக. ஜெபித்து ஜெயம் பெறுவொம். கிருபை நம்மோடிருப்பதாக!

தேவ கிருபை நம்மில் பெருகுவதாக!

ஜெபத்துடனும் அன்புடனும்

**சகோ. ஜான் M. ஜெயராஜ்**


இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியங்களின்

மாவடியில்

**நற்செய்திப் பெருவிழா**

( 40 ஆவது கன்வென்ஷன் )

நற்செய்தியாளர்கள்:

Pr. அற்புதராஜ் சாமுவேல் (சென்னை)

Pr. ஆமோஸ் (திண்டுக்கல்)

Pr. பென்ஸ் (கோவை)

2026 ஏப்ரல் 23, 24, 25, 26 (வியாழன்–ஞாயிறு)

தினமும் மாலை 6:30 மணி

வெள்ளி, சனி, ஞாயிறு பகல் கூட்டங்கள் உண்டு.

ஏப்ரல் 25 சனிக்கிழமை காலை 10:00 மணிக்கு

பெண்கள் சிறப்பு முகாம்

நற்செய்தி: சகோதரி. ஜீவா விஜயகுமார் (VMM விருதுநகர்)

**மன்னா:**

# கொம்பைப் (கிளை) பயன்படுத்துங்கள்

**தேவனுடைய மனுஷன்: கோடரி எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தை காண்பித்தபோது, ஒரு கொம்பை வெட்டி அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப்பண்ணினான்... (2இரா. 6:5)**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

இதோ, கிளை என்னப்பட்டவராகிய என் தாசனை நான் வரப்பண்ணுவேன் (சக. 3:8) என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த வருடத்திலும் சிலுவை தியான நாட்களை நமக்குத் தந்திருக்கிற தேவனைத் துதிப்போம். கிறிஸ்தவ வாழ்வில் சிலுவையில்லாமல் ஜெயம் இல்லை. சிலுவையின் பாதை என்பது நமக்கு நியமிக்கப்பட்ட பாதை என்பதைப் புரிந்தவர்கள், மகிழ்ச்சியாகவும் பெலன் கொள்பவராகவும் இருப்பார்கள்.

கடந்த மாதத்தில், “உங்கள் உண்மை உறங்குவதில்லை” எனும் தலைப்பீன் கீழாக கர்த்தர் நம்மோடு பேசியிருந்தார். நீங்களும் பயன் அடைந்திருப்பீர்கள் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். உங்கள் கிரியைகளுக்கும், பிரயாசங்களுக்கும் நிச்சயமாகவே பலன் உண்டு.

இந்த மாதத்திலும் கொம்பைப் பயன்படுத்துங்கள் எனும் தலைப்பின் கீழாக நம்முடன் பேசும்படி கர்த்தர் வந்திருக்கிறார். கொம்பு என்பது கிளையை குறிக்கும். அப்படியானால் கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்துங்கள் என்கிற அனுபவம் நமக்கு முன்பாக வைக்கப்படுகிறது. கிளையைப் பயன்படுத்தினால் உண்டாகும் நன்மைகள்:

தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி: இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது. நாங்கள் யோர்தான் மட்டும்போய், அவ்விடத்தில் உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம் என்றார்கள். அதற்கு எலிசா போங்கள் என்றான். அவர்களில் ஒருவன்; நீர் தயவு செய்து உமது அடியாரோடே கூட வரவேண்டும் என்றான். அதற்கு அவன் நான் வருகிறேன் என்று சொல்லி அவர்களோடே கூட ப் போனான்.

ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி வீழ்த்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது; அவன்: ஐயோ! என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான். தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக் காண்பித்தபோது, ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப்பண்ணி, எடுத்துக் கொள் என்றான். அப்படியே அவன் போய் தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான்.

அன்புநேசப் பிள்ளைகளே! கோடரியை இழந்தவன், விழுந்த இடத்தை காண்பித்தபோது, எலிசா ஒரு கொம்பை வெட்டி, அதை எறிந்து, இரும்பை மிதக்கப்பண்ணினான். ஈசாயென்னும் அடிமரத்திலிந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளையெழும்பிச் செழிக்கும். (ஏசா. 11:11) ஈசாயின் வம்சத்தில் பிறந்த தாவீதின் சந்நிதியில் இயேசு பிறந்தார். இயேசுவே அந்தக் கிளை(கொம்பு)

எனக்கன்பானவர்களே! கிளையாகிய இயேசுவை பயன்படுத்தினால் இழந்தவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த சிலுவை தியான நாட்களில் கொம்பாகிய கிளையை அதாவது இயேசுவை யார் யார் வாழ்க்கையில் பயன்படுத்தினார்களோ!

அவர்கள் நன்மையைப் பெற்றார்கள். நாமும் கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்தி, அவர் மூலமாக விடுதலையை, நன்மையைப் பெற்றுக்கொள்வோம். வேதாகமத்திலும் கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்தினவர்கள் குறித்துக் கற்றுக்கொள்வோம். ஜெபத்துடன் தொடருங்கள். கர்த்தர் இயேசு நம்முடன் பேசுவாராக!

# 1. ராஜாவின் மனுஷனுடைய மகன்

**ராஜாவின் மனுஷன்: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றான். அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான். (யோ. 4:50,51)**

இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டபோது, அவரிடத்திற்குப் போய், தன் மகன் மரண அவஸ்தையாயிருந்தபடியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான். அதற்கு இயேசு, நீ போகலாம் உன் மகன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன் அந்த வார்த்தையை நம்பிப் போனான்.

அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: எந்த மணிநேரத்தில் அவனுக்கு குணமுண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான். அதற்கு அவர்கள்: நேற்று ஏழாம் மணி நேரத்தில் ஜுரம் அவனை விட்டது என்றார்கள். உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணி நேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டார் அனைவரும் விசுவாசித்தார்கள்.

அன்பு நேசப்பிள்ளைகளே! தகப்பனானவன், மரண அவஸ்தையிலிருக்கிற தனது மகனின் காரியத்தை இயேசுவிடம் கொண்டு வருகிறான். இயேசு தமது வார்த்தையை அனுப்பி அவனை குணமாக்கினார். வசனத்தைக் கவனியுங்கள்.

**கர்த்தர் தமது வசனத்தை அனுப்பி, அவர்களைக் குணமாக்கி, அழிவுக்குத் தப்புவிக்கிறார்...(சங். 107:20)**

எனக்கன்பானவர்களே! தகப்பனானவன், தன் குமாரனின் வியாதியில், கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்தினதினால், கிளையானவர் செயல்படுவதற்கு இடங் கொடுத்தான். அற்புதமான விடுதலையைப் பெற்றுக் கொண்டான்.

சிலுவைதியான நாட்களுக்குள் வந்திருக்கின்ற விசுவாசப்பிள்ளைகளே! நீங்களும் உங்கள் வாழ்க்கையின் பாதையில் கொம்பை (கிளை) பயன்படுத்துவீர்களானால் விடுதலை, ஜெயம், சுகம், மீட்பையும் பெறுவீர்கள். வாசற்படி தட்டிக் கொண்டிருக்கிற நிற்கிற இயேசுவுக்கு உள்ளத்தில், இல்லத்தில் செயல்படுவதற்கு இடம் கொடுப்பீர்களானால் இதுவரை கண்டிராத, பெற்றிராத அற்புத நன்மைகளைப் பெறுவீர்கள் என்பது மறுக்க முடியாத, மாற்ற முடியாத உண்மை.

நாம் ஜெபிக்க வேண்டுமா? (சங்.65:2) ➠

ஒருநாள் எனது ஊழியத்தை முடித்துவிட்டு, பஸ்ஸில் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறேன். அது தான் எங்கள் ஊருக்கு வருகிற கடைசி பஸ். இரவு பன்னிரெண்டு பத்து. (12:10) எங்கள் ஊருக்கு செல்வதற்கு இன்றும் ஆறு கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. பஸ்ஸில் நான் மட்டும்தான் இருக்கிறேன். நடத்துனர் என்னிடத்தில் வந்து, "சார் இதற்கு மேல் பஸ் போகாது இறங்கிக் கொள்ளுங்கள்" என்றார். அதற்கு நான், "இந்த நடுஇரவில் நான் எப்படி போகமுடியும், என் ஊர் வரை நான் டிக்கெட் எடுத்திருக்கிறேன். அதனால் நான் இறங்கமாட்டேன்" என்றேன். "அதற்கு, நடத்துனர் ஐயா! அது உங்கள் விருப்பம் பஸ் இதற்குமேல் போகாது" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

நடு இரவு நேரம், ஆண்டவரே! நான் என்ன செய்வது என்று திகைத்தவனாக, கர்த்தாவே நீங்க தான் உதவி செய்ய வேண்டும் என்று என் மனதில் நினைத்துக்கொண்டேன். சற்றுநேரத்தில் இன்னொரு பஸ் வருகிறது. பஸ்ஸில் யாரும் இல்லை. ஓட்டுநரும், நடத்துனரும் டீ குடிக்க இறங்கினார்கள். நாள் அவர்களிடத்தில் விஷயத்தைச் சொன்னேன். அதற்கு அவர்கள் மதிய நேரத்தில் பழுதடைந்து நின்றுவிட்ட பேருந்தை, சீர்படுத்தி உருட்டிக் கொண்டு வருகிறோம். ஏறிக் கொள்ளுங்கள், உங்கள் ஊரைத் தாண்டினால் விட்டுவிடுகிறோம் என்றார்கள். நானும் ஸ்தோத்திரத்துடன் ஏறிக்கொண்டேன். ஊர் வந்து சேர்ந்தேன். நமது வேலையை செய்து வருகிற, என் மகனுக்கு நடுஇரவில் இப்படிப்பட்ட சோதனை வருகிறது என்பதை அறிந்ததினால், எனக்காகவே, எனக்காகவே ஒரு பேருந்தை பழுதாக்கி, சரியான நேரத்தில் கொண்டு வந்தாரே அவர் எத்தனை நல்லவர். உங்களுக்கும் அப்படிச் செய்வார். ஆபத்து இக்கட்டு, நெருக்கங்களில் கிளையைப் பயன்படுத்துங்கள். ஜெயம் பெறுவீர்கள்.

## 2. ஜெப ஆலயத்தலைவனாகிய யவீருவின் மகள்:

**ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு என்னும் பேருள்ள ஒருவன் வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்தபடியால், தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக் கொண்டான். அவர் போகையில் திரளான ஜனங்கள் அவரை நெருக்கினார்கள். (லூக். 8:41,42)**

இயேசு கிறிஸ்து யவீருவின் வீட்டிற்கு போகும்போது திரளான ஜனங்கள் அவரை நெருக்கினார்கள். நாமும் நமது வாழ்க்கையில், விசுவாச ஜீவியத்தில் இயேசுவை நோக்கி: பயணிக்கும்போது மனுஷரால் நெருக்கப்படுகிறோம். அப்படிப்பட்ட சமயங்களில் அவசரப்படவோ, குறைசொல்லவோ கோபப்படவோ கூடாது. நெருக்கம் இருந்தாலும், இயேசு நம்மோடு இருக்கிறாரே, என்பதில் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். நம்முடைய வேலைகள், கடமைகளை செய்ய முடியாமல் நெருக்கங்கள் வரலாம். அப்போது நாம் சோர்ந்து, தளர்ந்து போகக்கூடாது.

நம்மை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு மத்தியில், நம்மை ஏற்றுக்கொள்ளாதவரும் இருப்பார்கள். ஏற்றுக்கொள்ளாதவரைப் பார்த்து சோர்வு கொள்ளாமல் ஏற்றுக் கொள்ளுகிறவர்களைப் பார்த்து சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைய வேண்டும். கிறிஸ்துவினிமித்தம், சுவிசேஷத்தினிமித்தமும் நாம் பாடுபடும்படி அழைக்கப்பட்டிருப்பதால், எப்போதும் எல்லாவற்றிலும் மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**"Stop Board "**பார்த்தவுடன் நின்று விடாதே. (ஆதி. 32:6,7) ➡

ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு, தனது மகளின் மரணப் போராட்டத்திற்காக இயேசுவை அழைத்து வருகிறான். அந்தச் சமயத்தில் ஒரு பெரும்பாடுள்ள ஸ்திரீ, இயேசுவிடம் வந்து, இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு சுகமடைந்தாள். இந்த காரியத்தினால், இயேசு யவீருவின் வீட்டிற்கு வருவது தாமதமாகிறது. இந்தச் சூழ்நிலையில் யவீருக்கு ஓர் அதிர்ச்சியான செய்தி வருகிறது. யவீருவின் வீட்டிலிருந்து ஒருவன் வந்து அவனிடத்தில், உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான்.

இயேசு அதைக் கேட்டு, பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார். இயேசு அவன் வீட்டிற்கு வந்தபோது, துக்கங் கொண்டவர்களை வெளியே போகச் சொல்லி, பிள்ளையின் கையைப் பிடித்து; பிள்ளையே எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்பவும் அவளுக்குள் வந்தது. உடனே அவள் எழுந்திருந்தாள்.

அன்பு நேசப்பிள்ளைகளே! ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு, மரண போராட்டத்திலிருக்கிற தன் மகளின் வாழ்க்கையில் கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்தினான். அதினிமித்தம் அவள் உயிரடைந்தாள். அவளது தாயும் தகப்பனும் ஆச்சரியப்பட்டார்கள்.

எனக்கன்பானவர்களே! நீங்களும் கூட உங்கள் வாழ்க்கையின் பாதையில், யவீரு போன்று போராட்டத்திலும், கஷ்ட நஷ்டத்திலும் நெருக்கப்படுகிற நிலையில் இருக்கிறீர்களா? கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்துங்கள்... அவர் சொல்லுவதைக் கவனியுங்கள்.

**1. உபா. 1:17 – உங்களுக்கு கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டு வாருங்கள். நான் அதைக் கேட்பேன்.**

**2. எரே. 32:27 – என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?**

கிளையைப் பயன்படுத்துங்கள். நிச்சயமாகவே ஜெயம் பெறுவீர்கள். உங்கள் நம்பிக்கை வீண்போகாது...

## 3. நாயீன் ஊர் விதவையின் மகன்.

**இயேசு நாயீன் ஊரின் வாசலுக்கு சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டு வந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள். ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனே கூட வந்தார்கள். (லூக். 7:12)**

நாயீன் எனும் ஊரிலுள்ள ஓர் விதவைத்தாய் அவளுக்கு ஒரே மகன். அவனும் இப்போது மரித்துவிட்டான். அவனை அடக்கம் பண்ணும்படி தூக்கிக் கொண்டு ஊருக்கு வெளியே வருகிறார்கள். அந்தச் சமயத்தில் இயேசு ஊருக்குள் வருவதற்காக வருகிறார். ஜீவனும் மரணமும் சந்திக்கிறது. ஜீவன் ஜெயிக்கிறது. இயேசு தாயைப் பார்த்து , அவள் மேல் மனதுருகி, அழாதே என்று சொன்னார்.

அன்பு நேசப்பிள்ளைகளே! மரணவீட்டில், அழாதே என்பதும் கவலைப்படாதே என்பதும், நாம் என்ன செய்ய முடியும் என்பதும்... (மற்றும் பல) சகஜமான வார்த்தைகள். ஆனால் நாம் அழாதே என்பதற்கும், இயேசு அழாதே என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இயேசு அழாதே என்கிற வார்த்தையோடு நிற்காமல், மரித்த வாலிபனை

உயிரோடே எழுப்பிக் கொடுக்கிறார்.

கிளையாகிய இயேசு எங்கெல்லாம், யாரெல்லாம் செயல்பட இடம் கொடுக்கிறார்களோ, அவர்கள் தங்கள் வாழ்வில் அற்புதங்களையும் அதிசயங்களையும் பெறுகிறார்கள். அதைதான் இந்த வாலிபனுடைய வாழ்விலும் காண்கிறோம். இயேசு பயன்படுத்தப்பட்டதைக் கவனியுங்கள்.

**1. பாடையின் கிட்ட வந்தார்.**

**2. பாடையைத் தொட்டார்.**

**3. பாடையைச் சுமந்தவர்கள் நின்றார்கள்.**

**4. பாடையை கீழே இறக்கினார்கள்.**

**5. பாடையைத் திறந்தார்கள்.**

## 1. இயேசு பாடையின் கிட்ட வந்தார்.

ஜனங்கள் மரித்தவனை அடக்கம்பண்ணப் போகிறதினால், தங்களுக்கு எதிரே வருகிற கூட்டத்தைப் பார்த்து விலகித்தான் போவார்கள். அதினால் இயேசு பாடையை நோக்கிப் போகிறார். இயேசு கிட்ட வருகிறார் என்றாலே ஒரு விடுதலை, மாற்றம் உண்டாகும் என்பதுதான் உண்மை. வெளிச்சமாகிய இயேசு உங்களை நெருங்குவாரென்றால், சகல இருளும் துன்பங்களும் நீங்கிவிடும்.

## 2. பாடையைத் தொட்டார். (பெட்டி)

பாடையைத் தொட்டார் என்றால், தாயைத் கண்ணீர்விடப் பண்ணுகிற பாரத்தை, வேதனையைத் தொடுகிறார். அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட ஸ்திரீயின்மேல் வல்லமை இறங்கும்போது, அவரே தொடுகிறார் என்றால் அற்புதம் உயிர்ப்பித்தல் நடக்கும் என்பதே உண்மை.

## 3. பாடையை சுமந்தவர்கள் நின்றார்கள்.

அடக்கம் பண்ணப் போகிறவர்கள், இயேசு கிட்ட வந்து பாதையைத் தொட்டவுடன் நின்றார்கள். அப்படியானால் கிளையாகிய இயேசு செயல்பட இடங்கொடுக்கிறார்கள்.

## 4. பாடையை இயேசுவின் பாதத்தில் இறக்கினார்கள்.

பாடையைச் சுமந்தவர்கள்; தங்கள் தோளின்மேல் சுமந்து கொண்டிருக்கும்வரை இயேசு செயல்பட முடியாது. எனவே பாடையை அவருக்கு முன்னாக இறக்கினார்கள். இறக்கின பின்புதான் இயேசு செயல்படுகிறார். செயல்பட முடியும். நீங்கள் உங்களின் சுமைகளை அவர் பாதத்தில் இறக்குங்கள். அவர் ஜெயம் தருவார்.

**என் காரியத்தை உம்மிடத்தில் சாட்டிவிட்டேன்.(எரே. 20:12)**

## 5. பாடையைத் (பெட்டியை) திறந்தார்கள்.

இறக்கின பெட்டியை திறந்த பின்னர்தான் இயேசு பேசுகிறார். நாம் செய்ய வேண்டியதை நாம் செய்தால்தான், இயேசு செயல்படமுடியும். லாசருவின் கல்லறை முன்பாக நின்ற இயேசு , “கல்லை எடுத்துப் போடுங்கள்” என்றார். கல்லை எடுத்துப்

போட்ட பின்பு, இயேசு செயல்படுகிறார். இயேசு செயல்படத் தடையாக இருக்கிற பெட்டியின் மூடியைத் திறந்தவுடன், "வாலிபனே எழுந்திரு" என்கிறார்.

அன்பு நேசப்பிள்ளைகளே! கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்தினபடியால் விதவைத் தாய்க்கு அவள் மகன் கிடைத்தான். கண்ணீர் துடைக்கப்பட்டது. அதே இயேசுவுக்கு நீங்களும் இடங்கொடுக்கும்போது, உங்கள் கண்ணீரும் துடைக்கப்படும்.

## 4. மார்த்தாள், மரியாள் சகோதரன்: (லாசரு)

**இயேசு அதைக் கேட்டபோது; இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாக இருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்...(யோவான் 11:4)**

இயேசு பெத்தானியா கிராமத்திலுள்ள மார்த்தாளிடத்திலும், மரியாளிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார். லாசரு வியாதிப்பட்டபோது, அவனுடைய சகோதரிகள் ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள். இயேசு தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு நாள் தங்கினார். பின்பு தம்முடைய சீஷர்களை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார். அதின்படி புறப்பட்டு வந்தார்கள். இயேசு பெத்தானியாவுக்கு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலு நாளாயிற்று என்று கண்டார்.

இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு எதிர்கொண்டோடி, இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள். அதற்கு இயேசு, "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" என்றார். அவள்போய் மரியாளிடத்தில் "போதகர் வந்திருக்கிறார் உன்னை அழைக்கிறார்" என்றாள். உடனே மரியாளும் இயேசுவினிடத்தில் வந்தாள். அவர்கள் அழுகிறதையும், யூதர்கள் அழுகிறதையும், இயேசு கண்டு, ஆவியில் கலங்கி, துயரமடைந்து, "கண்ணீர் விட்டார்". காரணம் தாம் எதிர்பார்த்த விசுவாசமும், வெற்றியின் அறிக்கையும் அவர்களிடத்தில் இல்லாதிருந்தது. யார் அவர்கள்?

**1. சீஷர்கள் (11:6) – இயேசுவோடு இருக்கிறவர்கள்.**

**2. மார்த்தாள் (லூக். 10:41) – இயேசுவோடு இருந்தாலும் அநேக உலக கவலை.**

**3. மரியாள் (லூக். 10:39) – இயேசுவின் பாதத்தருகில் உட்கார்ந்தவள், ஆனால் கொஞ்சம் உலக சிநேகம்.**

இயேசு கல்லறையினிடத்துக்கு வந்தார். குகையை அடைத்திருந்த கல்லை எடுத்துப் போடுங்கள் என்றார். அவர்கள் எடுத்துப்போட்ட பின்பு "தமது கண்களை ஏறெடுத்து, பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்கிறார்."

அன்பு நேசப்பிள்ளைகளே! இவைகளனைத்திலும், கிளையாகிய இயேசு பயன்படுத்தப்படுதற்கு, மார்த்தாளும், மரியாளும் அநுகூலமாக இருந்தார்கள். பரலோகத்தின் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டு, "லாசருவே வெளியே வா" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். இயேசு செய்தவைகளைக் கண்ட யூதர்களின் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர் களானார்கள்.

தண்டவாளத்தில் புகைவண்டி. (சங். 119:105) ➠

எனக்கன்பானவர்களே, எலிசாவின் நாட்களில் கொம்பைக்(கிளையை) பயன்படுத்தினபோது, இழந்துபோன கோடரி தண்ணீரில் மிதந்தது. இந்த நாட்களிலும் கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்தினவர்கள் தங்கள் வாழ்விலும் நன்மையைப் பெற்றுக் கொண்டார்கள்.

**1. யோ. 4:50, 51 – ராஜாவின் மனுஷனுடைய மகன்.**

**2. லூக். 8:41,42 – ஜெப ஆலயத்தலைவனாகிய யவீருவின் மகள்.**

**3. லூக். 7:12 – நாயீன் ஊர் விதவையின் மகன்.**

**4. யோ. 11:4 – மார்த்தாள், மரியாளின் சகோதரன்.**


நீங்களும் கூட உங்கள் வாழ்க்கையில் கிளையாகிய இயேசுவைப் பயன்படுத்துங்கள். இந்த தபசு காலம் என்று சொல்லப்படும் உபவாச நாட்களில், கிளையாகிய இயேசு உங்கள் வாழ்வில் செயல்பட இடங் கொடுங்கள். பயன்படுத்துங்கள், நினைப்பதற்கும், விரும்புவதற்கும் அதிகமான விடுதலையை, ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக் கொள்வீர்கள்.

உள்ளங்கை மேகம் எழும்புகிறது எனும் வாக்குத்தத்தை கர்த்தர் தந்திருக்கிறார். ஆசீர்வாதங்களின் அடையாளம். நிச்சயமாகவே பெரிதானவைகளை காண்பீர்கள். இது இதுவரைக்கும் உங்களுக்காகவே வைக்கப்பட்டது. உங்கள் முன் வைத்து அனுபவியுங்கள். மகிமை இயேசுவுக்கே! ஆமென்!! அல்லேலூயா!!!

## ஜெப சேனை ஜெபக் குறிப்புகள் [மார்ச் 2026]



**1. மத்திய, மாநில அரசுகளின் நல்லாட்சிக்காக...**
**2. உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகளுக்காக...**
**3. நியாய ஸ்தலங்களில் மக்களுக்கு நீதி கிடைக்கும்படியாக...**
**4. பள்ளி, கல்லூரி, கல்வித்துறை அதிகாரிகளுக்காக...**
**5. ஐந்து மாநிலங்களில் நடக்கவிருக்கின்ற தேர்தலுக்காக...**
**6. தேசம் கர்த்தருக்குப் பிரியமானத் தலைவரைத் தெரிந்தெடுக்க...**
**7. வட இந்திய ஊழியர்கள், ஊழிய ஸ்தாபனங்களுக்காக...**
**8. மாணவர்கள் மத்தியில் ஜாதிவெறி, போதை பழக்கம் நீங்கிட...**
**9. நமது இயேசு ஜீவிக்கிறார் ஊழியர், ஊழியங்களுக்காக.**
**10. நமது ஜெப சேனை, TV நிகழ்ச்சிகள், பத்திரிக்கை, புத்தக ஊழியங்களுக்காக...**



## நடப்புச் செய்திகள்



1. தேர்தலுக்காக அனைத்துக் கட்சிகள் தீவிர ஆயத்தம்.
2. கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகள் தீவிரம் அடைந்து வருகிறது.
3. 2026- ஆம் ஆண்டிற்கான உபவாச நாட்கள் ஆரம்பமாகியுள்ளது.
4. இஸ்ரேல் தேசத்திற்கான சுற்றுலாவிற்காக அரசு இலவச உதவித் தொகை.
5. தமிழ்நாட்டில் முதல்வரின் இலவச திட்ட அறிவிப்புக்கு வரவேற்பு.
6. இறுதியாண்டு தேர்வு மாணவர்களுக்கு ஆரம்பமாகியுள்ளது.

சரியான ஆயத்தம் தேவை. (கலா. 5:7)

# தேவன் இப்படியும் பேசுவாரா!

## 1. தோல்வி என்பது அடைபட்ட வழியல்ல...

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! தோல்வியினால் முன்னேறும் பாதை அடைபட்டதாகத் தெரிகிறதே என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! தோல்வி என்பது முன்னேறுகிற வழியை அடைக்கிற அனுபவங்கள் அல்ல. அதற்கு மாறாக புதிய வழியை கண்டுபிடிக்கிற அனுபவம் ஆகும். மனந்தளந்திடாமல் புதிய வழியை நோக்கிடு" என்றார்.

**உன் கண்கள் நேராய் நோக்கக் கடவது....(நீதி. 4:25)**

## 2. ஏணியைக் குறை சொல்லாதே! :-

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! நன்மையும் உயர்வையும் எதிர்பார்க்கும் எனக்கு, அதற்கு எதிராகவே நடக்கிறதே ஏன்? என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! நீ உயர்வதும் தாழ்வதும் உனது வாயின் வார்த்தையினால்தான். ஏணியைப் பற்றித் தெரியுமல்லவா? அது ஏற்றியும் விடும், இறக்கியும் விடும். நீ அதை எப்படி பயன்படுத்துகிறாயோ அப்படியே நடக்கும். அதற்காக ஏணியை குறை சொல்லாதே" என்றார்.

**உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்றும் தீர்க்கப்படுவாய் என்றார். (மத்.12:37)**

## 3. உதைக்கிற குதிரையைவிட சுமக்கிற கழுதை நல்லது:

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! சொந்தங்கள் பந்தங்களால் காயப்படுகிறேனே என்று வேதனையுடன் ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! குதிரை நல்லதுதான். கழுதை விருப்பமற்றதுதான். ஆனால் குதிரை உதைக்கிறதே, நம்மை காயப்படுத்துகிறதே. உதைக்கிறக் குதிரையை விட்டுவிட்டு, சுமக்கிற கழுதையை வைத்துக் கொள்ளலாமே." என்றார்.

**பகையோடிருக்கும் கொழுத்த எருதின் கறியைப் பார்க்கிலும்**
**சிநேகத்தோடிருக்கும்ட இலைக்கறியே நல்லது.. (நீதி.15:17)**

எறும்புப் பாதை: (ஆகாய். 1:5) ➠

# தூண்டில்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! விடைகளை வெள்ளைத் தாளில் எழுதி, வருகிற 20ஆம் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படியாக அனுப்புங்கள்.

கடைசி இரண்டு கேள்விகளும் 1நாளாகமம் – எஸ்தர் புஸ்தகங்களுக்கிடையே உள்ளது.

**மார்ச் 2026** **தூண்டில் போடுங்கள், வலை (Internet) விரிக்காதீர்கள்.**

1. தன்னை உண்டாக்கினவரையே நோக்குவான் – யார்?
2. எனக்கு இப்படிச் செய்தருளினார் – என்றது யார்?
3. எங்களை அவர்கள் கையிலிருந்து விடுவிப்பாரில்லை – யார் அவர்கள்?
4. நான் உனக்கும் செய்வேன் – என்றது யார்?
5. எது அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்?
6. எது எங்கள் மேல் வராது?
7. நீங்கள் திரும்பி வந்தது என்ன என்று கேட்டது யார்?
8. தேவன் அவன் பிள்ளைகளுக்கு வைத்து வைத்திருக்கிறார் – எதை?
9. மிகவும் சிறிதும் அற்பமுமாயிருக்கும் – என்றது யார்?
10. இனித் திறக்கமாட்டாதிருப்பாய் – எதை?
11. நீ உன் வீட்டிலே இரு – என்றது யார்?
12. யாருடைய பெலன் குறைந்து போகிறது?

## 2026 பிப்ரவரி மாத மீன்கள்

1. யோபு 32:18 – வார்த்தைகள்
2. எசே. 7:22 – என் முகத்தை
3. சங். 10:13 – துன்மார்க்கன்
4. ஓசி. 7:14 – கர்த்தர்
5. 1இரா. 18:12 – ஒபதியா
6. யாக். 5:6 – நீதிமான்
7. எசே. 39:29 – கர்த்தர்
8. உபா. 2:4 – கர்த்தர்
9. மீகா 4:8 – முந்தின ஆளுகை
10. யோபு 6:25 – யோபு
11. 2இரா. 6:13 – எலிசா
12. 2சாமு. 18:13 – தாவீதின் சேவகன்

## 2026 ஜனவரி மாதம் மீன் பிடித்தவர்கள்

01. Mrs. ஜேன் தர்மராஜ் – பாக்கியநாதபுரம்.
02. Mrs.D. ஜெபக்குட்டி மோசஸ் – மருதகுளம்.
03. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி.
04. Mrs. செல்வி ஜேக்கப் – தென்காசி.
05. Mrs. ஹெலன் சுவிட் – டோனாவூர்.
06. Mrs. அன்னத்தாய் ஆல்பட் – மெஞ்ஞானபுரம்.
07. Mrs. அன்னபாக்கியம் தினகரன் – மதுரை.
08. Mrs. J. ஜான்சி – ஆனைமலை
09. Mrs. சுசிலா ஜெயக்குமார் – அரக்கோணம்.
10. Mrs. ஷெர்லி சாம் – அரக்கோணம்.
11. Sist. அலீஸ் குணசீலி – சாயர்புரம்.

## 2026 ஜனவரி மாதம் மீன் பிடிக்க பிரயாசப்பட்டவர்கள்

01. Mrs. ஜெயந்தி விக்டர் – ஓதுர்.
02. Mrs. வசந்தா செல்வராஜ் – கள்ளக்குறிச்சி

Registered News Paper
R.n.i. No : Tntam / 2004 / 12805. Postal Regn. No : Tvl / 005 / 2021 - 2023
Date of Publication : 01.03.2026



# இயேசு ஜீவிக்கிறார் வெளியீடுகள்

தேவ கிருபையினால் பாடல் CD–க்களும், புத்தகமும் வெளியிடக் கர்த்தர் உதவி செய்தார். ஜீவ கீதங்கள் பாடல்களும் மற்றும் புதிய புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளது. ஜெபத்துடன் பெற்று பயனடையுங்கள்.

**பதிவுத் தபாலில் அனுப்பிட செலவு தனி**

1. ஜீவ கீதங்கள் (ACD) (Vol : 1 to 24)
2. ஜீவ கீதங்கள் (VCD), MP3
3. கேட்கும் கிருபை
4. ஜீவ கீதங்கள் (220 + 35 பாடல்கள்)
5. தேவன் இப்படியும் பேசுவாரா! (Part 1-8)
6. நோவாவின் பேழை
7. வளரும் செடி
8. மனிதன்
9. வெற்றியுள்ளவன்
10. முதலாம் அற்புதம்
11. வாலிபனே நீ யார்?
12. என் இருதயத்திற்கு ஏற்றவனான தாவீது
13. ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன்
14. தேவன் தெரிந்த நாகமான்
15. ஊழியரே இது உங்களுக்காக (50 செய்திகள்)
16. டோனாவூரம்மா
17. நான் கண்ட சகேயு
18. ஜீவ விதைகள் (150 பிரசங்க குறிப்புகள்)
19. நகோமி
20. அந்த ராத்திரியிலே...

**JOHN M. JEYARAJ,**
178, Dohnavur Road, Mavadi - 627 107
Tirunelveli Dist., S. India
Phone : (04635) 210 691, Cell : 94431 13292
E-mail : yesujeevikkirar@gmail.com, Website : www.jesuslivesministries.in

Book Post

To

Owned & Published by : John M. Jeyaraj From 123-A, Dohnavur Road, Mavadi - 627107 - Tirunelveli District. Printed by Mr. S. Jairus Ponniah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai. Tirunelveli Dt. - 627 002. Editor : John M. Jeyaraj